INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

DOI: 10.54392/ijmrd223S19

# Social Change Depicted in Short Stories of Sundara Ramasamy

## சுந்தர ராமசாமியின் சிறுகதைகளில் சமுதாய மாற்றம்

**K. Kardinamary [a,*]**

[a] Department of Tamil, Shri Shankarlal Sundarbai Shasun Jain College for Women, Chennai-600017, Tamil Nadu, India.

*Corresponding author Email: kardinamary1983@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S19

Received: 13-04-2022; Revised: 11-07-2022; Accepted: 14-07-2022; Published: 19-08-2022

**Abstract:** Literature creates life. Literature emerges from life. Literature is like a mirror that shows the life of society. Art and literature help us to know the history of mankind and to learn about their culture and beliefs. Among these, literature clearly shows the characteristics of the culture of the time in which it appeared. Culture is the state of consciousness about morals, behaviors, beliefs, and values that are inherent in human life. In the article, let us see the role of society in the short stories of Sundara Ramasamy, one of the modern writers.

**Keywords:** Sundara Ramasamy, Modern Tamil Writer, Mankind, Literature

**Language: Tamil**

## முன்னுரை

இலக்கியம் வாழ்க்கையை உருவாக்குகிறது. வாழ்க்கையில் இருந்து இலக்கியம் உருவாகிறது. சமுதாயத்தின் வாழ்க்கையைக் காட்டும் கண்ணாடி போன்றது இலக்கியம். சமூகத்தைப் பிரதிபலிக்கும் காலச் சுவடு மனித இன வரலாற்றை அறிந்து கொள்வதற்கும், அவர்களின் பண்பாடு, நம்பிக்கைகள் குறித்து தெரிந்து கொள்ள கலையும், இலக்கியமும் துணை நிற்கின்றன. இவற்றுள் இலக்கியம் அது தோன்றிய காலத்தின் பண்புகளை பண்பாட்டை தெளிவாகக் கண் முன் காட்டுகின்றது. மனிதனுடைய வாழ்நிலைகளில் சாராமாகக் காணப்படுகின்ற ஒழுகலாறுகள், நடத்தைகள், நம்பிக்கைகள், விழுமியங்கள் ஆகியவற்றைப் பற்றிய உணர்வு நிலைகள் பண்பாடாகும். நவீன இலக்கியங்களில் ஒருவரான சுந்தர ராமசாமியின் சிறுகதைகளில் சமுதாய பாங்கினை குறித்து கட்டுரையில் காண்போம்.

சமுதாயம் என்ற சொல் மனித இனத்தை மட்டுமே குறிப்பிடக்கூடியது. பல்வேறு விதமான பழக்க வழக்கங்களைக் கொண்ட மக்களும் சமுதாயம் என்னும் பொது அமைப்பின் கீழ் ஒன்று படுகிறார்கள். சமுதாய மாற்றம் என்பது தனி மனிதர்கள் ஓர் ஒழுங்கின் அடிப்படையில் சேர்ந்துள்ள அமைப்பு முறைகளையும் குறிக்கின்றது பொதுவாக மக்களிடையே ஏற்படும் ஒவ்வொரு மாற்றங்களைக் குறிப்பிடுகின்றது (Nalinidevi, 1991). சமயம், பண்பாடு, அறிவியல், அரசியல், நாட்டுப்பற்று முதலியவற்றின் அடிப்படையில் சேர்ந்து செயல்படும் வாழும் மக்கள் கூட்டத்தினையே சமுதாயம்" என்பர் அறிஞர் (Rajendran, 1985).

சமுதாயம் என்பது எப்பொழுதுமே மாறிக் கொண்டும் வளர்ந்து கொண்டும் வரும்" என்பதால் சமுதாயமானது தனது வளர்ச்சியில் பல மாறுபட்ட நிகழ்வுகளை எதிர் கொண்டே வளரும். இந்த வரலாற்றினை காணும்போதும் சமுதாய வளர்ச்சியில் மனிதன் எவ்வாறெல்லாம் பட்டைத் தீட்டப்பட்டுள்ளான் என்பதை அறியமுடிகிறது (Akilan, 1972).

## சமூகம் சார்ந்த பதிவு

படைப்பாளி என்பவன் வெறும் கற்பனைகளை மட்டுமே தருபவன் அல்லன். சமூக நிகழ்வுகளோடு இடையறாத தொடர்ந்த உறவுகள் கொள்பவன் ஆவான். எல்லாப் படைப்பாளிகளுமே

தனக்கென்ற லட்சிய உலகம் ஒன்றைக் கொண்டிருப்பர். அதை அவர்களின் படைப்புகளில் ஏதோ ஒரு வகையில் வெளிப்படுத்துவர். லட்சியத்தின் பால் கொண்ட கொள்கைப் பிடிப்பே படைப்பின் மூலம் சமுதாய மாற்றத்தை எதிர்நோக்குகிறது. சுந்தர ராமசாமியின் படைப்புகளில் தொடக்க காலங்களில் சமூக விமர்சனம் வெளிப்படையாக உள்ளது. அக்கால கட்டத்தில் வரும் சமுதாய மாற்றங்களை சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை எதிர்த்தல் என்கிற பொதுவான இயல்பு அக்கால கட்ட கதைகளில் பல்வேறு பரிமாணங்களில் இடம் பெற்றுள்ளன. அத்தகைய கதைகளில் சில இங்கு உட்படுத்துகின்றன.

“புதுமையிலும் புரட்சியிலும், என் மனம் கொண்டிருந்த

மோகத்தினால் மார்க்சிய அரசியல் -இலக்கியக்

கொள்கைகளைத் தழுவி, சுருதி சுத்தமான உலகம்

மலரக் கனாக் கண்டு, தத்துவம் - திட்டம் சுமந்து

பிறப்பித்த கதைகளில் சில”

என்று குறிப்பிடுகிறார். சுந்தர ராமசாமியின் சமூகப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்கும், அநீதிகளுக்கும் எதிராக வெளிப்படையாகக் குரல் எழுப்புகிறார்.

## குடும்பம்

குடும்பம் என்பது சமூகக் கட்டமைப்பின் அடிப்படை ஆதாரமாகும். இனக்குழுக்களாக ஒன்றுகூடி வாழ்ந்திருந்த மனித இனத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியாகக் குடும்பம் என்ற அமைப்பை ஏற்படுத்திக் கொண்டதைக் குறிப்பிடலாம். இத்தகைய நாகரீக வாழ்விற்கான தொடக்கங்கள், மனிதன் குடும்பமாய்ச் சேர்ந்து வாழத் தொடங்கிய அந்த ஆரம்ப காலங்களில் இருந்தே ஏற்பட்டிருக்கின்றன.

இனக்குழு சமுதாயம் கலைந்து சிதைந்த பின்னால், மனித சமூகம் அளவு ரீதியான மாற்றம் கொண்ட ஒரு காலகட்டத்திற்குள்ளே நுழைய ஆரம்பித்தது. அந்தக் காலகட்டம்தான் புலன் அறிவிலிருந்து பகுத்தறிவிற்கு மனித சமூகம் முன்னேறியதைக் குறிக்கும் காலகட்டமாகும். அதுதான் நவீன அறிவியலுக்கான அடிப்படைகள் உருவான காலகட்டமாகும்” (George Thomson, 1995).

எதிர் இனக் கவர்ச்சியின் அடிப்படையில் மனிதன் ஒன்றாய் இணைவதற்கான அடிப்படை அமைப்பே குடும்பம் என்ற கருத்தைப் பெரும்பாலான சமூகங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன. சக மனிதனோடு உறவு கொள்ளுதல், அன்பு செலுத்துதல், விட்டுக் கொடுத்து ஒத்துழைத்து வாழுதல் என்பன ஒரு சமூகத்தின் நிலைபேற்றுக்கு இன்றியமையாதவை. இக்கருத்துகள் குடும்பம் என்ற அமைப்பின் மூலமாகவே கற்றுக் கொள்ளப்படுகின்றன.

குடும்ப உறவுகள் தற்காலத்தில் மிகவும் சிக்கலாகி வருகின்றன. சூழ்நிலையின் நெருக்கடிகள், குடும்பம் என்ற அமைப்பையே சிதறவைக்கும் அளவு பெருகி வருகின்றன. இத்தகைய அமைப்பிற்கான காரணம் காலம் காலமாக ஏற்பட்டுள்ள சுமைகளின் கனம்தான் என்ற கூறல் பொருத்தமானதாகும். குறிப்பாகப் பெண்களுக்கு இன்றைய சமூகத்தில் இழைக்கப்படுகிற கொடுமைகளை எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. காலத்திற்கேற்ற மாறுதல்களைக் குடும்ப அமைப்பினுள் ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் இவ்வமைப்புத் தகர்ந்து போகாதபடி காத்துக் கொள்ள முடியும்.

குடும்ப அமைப்பிற்கு எதிராக சிந்தனைகள் முன்வைக்கப்படும் இன்றையச் சூழலில் ஒரு படைப்பாளியின் சமூக அக்கறையை அவர் படைப்புகளின் வழியாகவே புரிந்து கொள்ள முடியும். சுந்தர ராமசாமியின் சிறுகதைகளில் சமுதாய மாற்றங்களில் உணடான மானுடம் தொடர்பான பார்வையும் இதில் விளங்குகிறது.

## ஒன்றும் புரியவில்லை

‘ஒன்றும் புரியவில்லை’ என்கிற கதை, மணமாகிப் புகுந்தவீடு செல்லும் ஓர் இளம் பெண்ணின் மனநிலையில் ஏற்படும் மாறுதல்களைச் சொல்கிறது. ஒரு பெண் திருமணம் முடிந்து தன் கணவனுடன் பிறந்த வீட்டைப் பிரிந்து புகுந்த வீடு செல்லும் போதும் அழுகிறாள்; பின்னர் ஓரிரு

நாட்கள் கழித்துப் புகுந்த வீட்டிலிருந்து மீண்டும் பிறந்த வீட்டிற்குத் திரும்பும் போதும் அழுகிறாள். அவளின் இந்த இரண்டு அழுகைக்கும் பொருள் புரியாமல் உடன் செல்லும் தம்பி விழிக்கிறான்.

'பங்கஜம் அம்பியைத் தனது உடம்போடு சேர்த்து

அணைத்தவாறு அவனது காதருகில் குனிந்து அம்பி,

நீ சின்னக் குழந்தையடா இப்போ சொன்னால்

உனக்குத் தெரியாது பெரியவன் ஆனதும் உனக்கே

தெரியும் என்றாள்

அம்பிக்கு ஒன்றும் புரியவில்லை"

என்ற கதையின் கடைசிப் பகுதியில் இருந்து இதை தெரிந்து கொள்ள முடிகிறது. சுந்தர ராமசாமி இந்தக் கதையைச் சொல்லிருக்கும் நேர்த்தியிலிருந்து குடும்பம் பற்றிய தன் கருத்தைத் தெளிவுபடுத்துகிறார் (Sundara Ramaswamy, 1986).

## கைக்குழந்தை

'குழந்தை' என்னும் கதையும் அன்பு நிறைந்த ஒரு குடும்பத்தையே சித்தரிக்கிறது. கதையில் வரும் ராஜி கணவன் சாமுவிடம் அளவற்ற அன்பைக் காட்டுகிறாள். கணவனின் சகல காரியங்களையும் தானே கவனித்துக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறாள். கணவன் மீதும் குடும்பத்தின் மீதும் கொண்டுள்ள அளவற்ற அன்பு காரணமாக அவளைப் பொறுத்தவரை கணவனும் ஒரு கைக்குழந்தையே. சாமு, நண்பர்களின் தூண்டுதல் காரணமாக அவள் உடம்புக்கு ஏற்காது; வேண்டாமென்று எவ்வளவோ மறுத்தபோதும் கேட்காமல் பிக்னிக் போய் வருகிறார். அவள் பயந்தது போலவே சாமுவுக்குக் காய்ச்சல் வந்து விடுகிறது. காய்ச்சல் குணமடைய பக்கத்திலேயே இருந்து கொண்டு ராஜி நிறைய வைத்தியம் செய்கிறாள். அவருக்குக் காய்ச்சல் குணமாகிறது. ராஜி பொய்யாய்க் கோபம் கொள்கிறாள். இறுதியில் சாமு அவளிடம் வாய்விட்டு மன்னிப்பு கேட்கிறார். இதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் அவள் அவரது வாயை பொத்தியபடி அழுகிறாள்.

"ராஜி... ராஜி... நான் என்னமோ தெரியாத்தனமாக

உளறி விட்டேன்.' அவள் விரல்களை விடுவித்துக்

கொண்டாள். முகத்தை மூடிக்கொண்டு கவிழ்ந்து

படுத்தாள். பொருமும் சப்தம் அமைதியில் கனத்தது

அவர் மனதில் சப்த அலை பெருகி எதிரொலித்தது.

அவள் காதோரத்தில்அவர் வாய் கூடிற்று

'ராஜி, இதோப் பாரு என்னெ. என்னெ.

மன்னிச். சுடு. அவள் சட்டென்று அவர்

வாயை பொத்தினாள். மார்பில் விழுந்து

பொருமினாள் அவள்"

கணவன் மீது கொண்ட அன்பு அவளை இப்படியெல்லாம் செய்ய வைக்கிறது. அவரது உடல்நிலை பற்றி முழுவதும் அறிந்து வைத்திருக்கிறாள். ஆகவே அவருக்காக கவலைப்படுகிறார் (Sundara Ramaswamy, 1986). சாமுவும் அவளது அன்புக்குக் கட்டுப்பட்டு விட்டுக் கொடுக்கிறார். அக்குடும்பம் இன்பமும் மகிழ்ச்சியுமாக இருக்கிறது.

## கர்ப்பிணி பெண்

அன்பே மேலானது. அது மொழி, கலாச்சாரம், மதம் முதலான வரையறைகளையும், எல்லைகளையும் மீறிச் செல்லக் கூடியது என்பதை 'அடைக்கலம்' என்று கதை வலியுறுத்துகிறது.

கதையில் வரும் பாகீரதிப் பாட்டி பழைய மரபுகளையும், ஒழுக்கங்களையும் கண்ணேபோல் போடுகிறாள். எதற்காகவும் தன் ஆசார முறைமைகளை விட்டுக் கொடுப்பதில்லை. டெல்லியில் வசிக்கின்ற தன் மகளோடு சில நாட்கள் தங்குகிறாள். தன் பேத்தியைத் தாவணி போடச் செல்கிறாள். மகளின் நவீன ஆடை அலங்காரங்களை வெறுக்கிறாள். மருமகன் சிகரெட் பிடிப்பதும், அசைவம் சாப்பிடுவதும் பாட்டிக்கு அருவருப்பை தருகிறது. நகரின் நாகரீகம் வெறுத்துப் போகின்றது.

"டில்லி என்ன செய்யும்? பட்டை பட்டையாய்

விபூதி போட்டுக்கொண்டு பஞ்ச கச்சமும் கட்டிக்

கொண்டு நிற்குமோ? மனுஷாள் விதரணை கெட்டுப்

போய்விட்டால் ஊர் என்ன செய்யும்?." (Sundara Ramaswamy, 1986)

என்று சொல்லித் தனது ஊருக்கு திரும்பி விடுகிறாள்.

"இருந்தாலும் இத்தனை ஆண் பிள்ளைகளுக்கு

மத்தியில் நட்ட நடுவில் நின்று கொண்டு பீடி

குடிக்கக் குறைவாக இராதோ? எந்த தேசத்து

வழக்கமோ?" (Sundara Ramaswamy, 1986)

என்று சலித்துக் கொள்கிறாள். அவள் கண்ணாடியை எச்சிலால் துடைப்பதைப் பார்த்து அருவருத்துப் பாகீரதிப் பாட்டிக்குக் குமட்டிக்கொண்டு வருகிறது. மொத்தத்தில் துரைச்சாணி மீது மிகுந்த வெறுப்பே ஏற்படுகிறது. ஆனால் அதே வேளையில் அவள் நிறைமாதக் கர்ப்பிணி என்று கண்டதும் அவள் மீது அன்பு பொங்குகிறது. தான் நெருக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்த இடத்தைக் கூட விட்டுக் கொடுத்து அவளைக் கூப்பிட்டு உட்கார சொல்கிறாள்.

துரைச்சாணியின் செய்கைகளால் அவளைச் சீ! தரித்திரம்! என்று வெறுத்த பாகீரதிப் பாட்டியே,

"அடியே உன்னைத் தாண்டி! நானும் ஒரு நாழியாப்

பார்த்துண்டிருக்கேன். சூட்டுவச்ச மரம் கணக்கா

நிக்கறியே! ஒரு ஜீவன் வயத்தில தொங்கறது

என்கிற நெனைப்பில்லையோ? இதோப் பாரு!

சமத்தா இப்படி உக்காரு"

என்கிறாள் (Sundara Ramaswamy, 1986).

கதையில் பாகீரதிப் பாட்டி டில்லியில் வீட்டில் நடந்து கொண்டதும், பஸ் ஸ்டாண்டில் நடந்து கொண்டதும் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட செய்கைகளாகும். தன் ஆதாரங்களுக்காக மகனிடமிருந்து புறப்பட்டு வந்தவள், தனக்கு வெறுப்பைத் தந்தவளான துரைச்சாணிக்குத் தன் இடத்தைத் தந்து உதவுகிறாள். அன்பு மேலோங்கும் பொழுது எல்லா விதமான வெறுப்புகளும் மறைந்து விடுகின்றன. மனிதப் பண்புகளிலேயே மிகச் சிறந்த பண்பு, அவனை உயர்த்தும் பண்பு பிறரிடம் அன்பு காட்டுவதே மனிதநேயம் என்பதை இக்கதையின் கருத்தாக உணரமுடிகிறது. ஆகவே இக்கதையின் அடிப்படையாக விளங்குவது ஆகும். சுந்தர ராமசாமி மானுடர்களில் ஒவ்வொருவராக பிரித்து அவர்களின் குணங்களை உணர்ந்து இருக்கிறார் என்பது இதன் மூலம் வெளிப்படுகிறது

## மனித ஆற்றல் மீது நம்பிக்கை

சுந்தர ராமசாமி தன் கதையில் கதைகளில் தொடர்ந்து வலியுறுத்தி வந்த மனிதநேய பார்வையின் அடுத்த கட்ட வளர்ச்சியாக, அவர் மனித ஆற்றல் மீது நம்பிக்கை வைத்திருப்பதைச் சுட்டிக் காட்டலாம். மனித வாழ்க்கையில் வெற்றி தோல்வி என்பது இயல்பான ஒன்றாகும். தோல்வி நேரும் போது துவண்டு விடாமலும், வெற்றிகிட்டும் போது வியந்து போகாமலும் அடுத்து அடுத்து முயற்சிகளை மேற்கொள்ளும் மனிதனே மேலும் மேலும் வெற்றிகளை அடைகிறான். தோல்விகளை

வெற்றிக்கு இட்டுச் செல்லும் படிகளாக மாற்றிக்கொள்ளவும், தனக்கெதிரான சூழ்நிலைகளையும் தனக்குச் சாதகமாக மாற்றிக் கொள்கிற திறமையும் மனிதனிடம் மட்டுமே காணமுடியும். இந்தக் குணங்களே மனிதனை இன்றளவும் முன்னேற வைத்துள்ளது.

## பெண்கள் பற்றிய பார்வை

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ள சுந்தர ராமசாமியின் கதைகளுல் பல கதைகளில் பெண்கள் முக்கியக் கதைமாந்தர்களாக இடம்பெறுகிறார்கள். அகம், கைக் குழந்தை, ஒன்றும் புரியவில்லை ஆகிய கதைகளில் வரும் பாத்திரங்கள் குடும்பப் பெண்களாக உள்ளனர். மற்றவற்றில் இடம்பெறும் பெண் பாத்திரங்கள் குடும்பப் பெண்களாக இல்லாவிடினும் வலுவானதாகப் படைக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது. 'செங்கமலமும் ஒரு சோப்பும்' என்ற கதை மட்டும் வேறு பாத்திரங்களில் இன்றி முழுக்க முழுக்கப் பெண்களை மட்டுமே கொண்டு படைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது

## மன உறவும் மனப்பக்குவமும்

புதிதாக திருமணமாகும் ஒரு பெண், தன் புகுந்த வீட்டில் தங்கும் சில நாட்கள், சில மணி நேரங்களுக்குள்ளாக ஒரு குடும்பப் பெண்ணாக மாறி விடுகிற பக்குவத்தை அவள் தம்பியின் பார்வையில் 'ஒன்றும் புரியவில்லை' கதை சித்தரிக்கிறது. மணப்பெண் திருமணம் முடிந்து சில சடங்குகளுக்காக புகுந்த வீட்டுக்குப் புறப்படுவதில் கதை தொடங்குகிறது. மணப்பெண் பங்கஜம் மீண்டும் தாய்வீடு திரும்புவதில் கதை முடிகிறது. இரண்டு சந்தர்ப்பங்களிலும் அவள் கண்ணீர் விடுகிறாள். உடன் சென்ற தம்பி இதற்கு ஒரு காரணமும் புரியாமல் விழிக்கிறான்.

தாய் வீட்டிலிருந்து புறப்பட்டு மீண்டும் திரும்பி வருவதற்குள் உள்ள இடைவெளியில் பங்கஜத்தின் மனப்பக்குவத்தையும் முதிர்ச்சியையும் கதை சித்தரிக்கிறது. இந்த இடைவெளிக்குள் அந்த மனமாற்றம் - முதிர்ச்சி எப்படி சாத்தியமாகிறது? நம் சமூகம் தலைமுறை தலைமுறையாகப் பெண்களுக்கு கற்பித்து வரும் மரபுப் படிப்பினை தவிர வேறு என்னவாக இருக்க முடியும்? இந்த சமுதாய மாற்றம் இன்று நேற்று அன்று. சங்ககாலம் தொட்டு வருகிறது. இதனை,

"அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தள் கொல்?"

என்று சங்கப் புலவர் போதனார் வியந்து பாராட்டுகிறார்.

தாய் வீட்டிலிருந்து புறப்படும்போது இப்படி அழுது கொண்டிருந்தவள் கணவன் வீட்டுக்கு வந்தவுடன் மாறி போகிறாள்.

"அவள் அடிக்கடி தனக்குத்தானே சிரித்துக்

கொண்டிருந்தாள். முகத்தில் குப்பென்று சிரிப்பு

வந்து வந்து மறைந்து கொண்டிருந்தது"

மேலும் எதற்கெடுத்தாலும் 'அவர்' 'அவர்' என்று தன்னோடு கணவரை இணைத்துக் கொண்டு பேசுகிறாள் (Vaiyapuri Pillai, 1967). இப்படி அவள் உலகமே மாறிவிடுகிறது. இப்படி காலம் காலமாக நம் சமூகம் குடும்பப் பெண்களுக்குக் கற்பித்துக் கொடுத்துள்ள பாடம் சமூக மாற்றமும் அன்பான சூழலில் வளர்ந்த ஒரு குடும்பப்பெண் குடும்பத்தலைவியாக உயர்வதையும், இதை புரிந்து கொள்ள முடிகிறது.

## முடிவுரை

சுந்தர ராமசாமியின் இலக்கியப் பணி தமிழ் மொழியில் பெரும் பங்கு வகிக்கிறது. சமகால சூழலை அடியொற்றி எழுந்த படைப்புகள் நவீன இலக்கியங்களாக மேம்பட்டு நிற்கின்றது. மானுடவியல் சமுதாய மாற்றம் மற்றும் குடும்பம் மற்றும் மனித ஆற்றல் மீது நம்பிக்கை போன்ற தலைப்புகளில் வழித் தோன்றலாக இக்கட்டுரை தெளிவுப் படுத்துகின்றது.

## References


Akilan, (1972) Kadhaikalai, Bhaarathi Putthakap Pannai, Thanjavur, India

George Thomson, (1995) Manitha Samuga Saram, Chennai Book House, Chennai, India.

Nalinidevi, (1991) N., Rajam Krishnanin Puthinangal Samuga Matram, Manivasagar Pathippagam, Chennai, India.

Rajendran, S., (1985) Tamil Kavithaigalil Dravida Iyakkathin Thakkam, Poomani Pathippagam, Chennai, India

Sundara Ramaswamy, (1986) Sundara Ramaswamy Sirukathaikal, Kriya, Royapettah, Chennai, India.

Vaiyapuri Pillai, S., (1987) Narrinai Sanga Ilakkiyam, Paari Niliyam, Chennai, India.


### Funding

No funding was received for conducting this study.

### Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.

### About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

### Cite this Article

K. Kardinamary, Social Change Depicted in Short Stories of Sundara Ramasamy, Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 43-48. DOI: https://doi.org/10.54392/ijmrd223S19